2. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்

(i) பெரியாறு உற்பத்தியாகும் இடத்தில் அணைகட்டப்படுவதால் தமிழகம் பாதிக்கப்படுதல்

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டுச் சட்டப் பேரவை விதிஎண் 42-க்கு இணங்க கீழ்க்காணும் அவசரமும் பொது முக்கியமும் வாய்ந்த காரியம் ஒன்றைப் பற்றி விவாதிக்க சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டி அறிவிக்கை கொடுத்திருக்கிறேன். அதாவது—

" தமிழ்நாட்டிற்கு, குறிப்பாக, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களுக்குப் பாசனத்துக்குப் பயன்படும் பெரியாறு நதியின் மீது, அந்த நதி உற்பத்தியாகும் இடத்தில் அணை கட்டப்படுவதால் நமது மாவட்டங்களின் பாசனத்துக்குக் கிடைக்கும் தண்ணீர் குறைந்து போகும் நிலை ".

பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பெரியாற்றில் தண்ணீர் போதுமானதாக இல்லை. அந்த அணையில் கூட போதுமான அளவு தண்ணீர் இல்லை. பயிர்கள் காய்ந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் கேரள அரசு அந்த நதி உற்பத்தியாகும் இடத்தில் இடமலையாற்றில் அணை கட்டுவதாகத் தெரிகிறது. அவ்வாறு அங்கே அணை கட்டுவது (Riparian rights) முன் பாத்தியதை உரிமையை மீறியதாகும். அதனால் மதுரை, இராமநாதபுரம் பகுதிகளுக்குக் கிடைத்து வரும் தண்ணீர் குறையும். அதனால் மக்கள் பீதியும், பயமும் கொண்டிருக்கிறார்கள். இதைவிட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த காரியம் இருக்க முடியாது. அரசாங்கத்தின் அன்றாட அலுவல்களுக்கும் அப்பாற்பட்ட ஒன்று என்ற நிலையில் இதைப் பற்றி விவாதிக்க அவையின் மற்ற அலுவல்களை ஒற்றி வைக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் இந்த மன்றத்தில் எடுத்துக் கொண்டு விவாதிக்கப் படக்கூடிய மானியக் கோரிக்கைகளின் மீது உறுப்பினர்கள் இந்தக் கருத்துக்களை எல்லாம் எடுத்துச் சொல்ல நல்ல வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, சபையை ஒற்றி வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது அரசின் சாதாரண நிர்வாகத்திற்கு உட்பட்டது அல்ல என்று கருதினாலும், இதுபற்றி பேசுவதற்கு வாய்ப்பு இருக்கும் காரணத்தால் எனது அனுமதியை மறுக்கிறேன்.

(ii) தமிழகத் திரைப்படங்கள் மகாராஷ்டிரத்தில் திரையிடப்பட சிவ சேனையின் எதிர்ப்பு.

திரு. சி. கோவிந்தராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 42 ஆவது விதியின்படி கீழ் காணும் அவசரமும் பொது முக்கியத்துவமும் வாய்ந்த விஷயத்தைப் பற்றி விவாதிக்க சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டி அறிவிக்கை கொடுத்துள்ளேன். அதாவது

" தமிழகத்தில் எடுக்கும் படங்களைத் திரையிடக்கூடாதென்று சிவாஜி சேனை எதிர்ப்பதால் தொழில் பாதிக்கப்பட்டு அதனால் சுமார் 15,000 பேர்களின் வாழ்க்கை பாதிக்கப்பட்டிருக்கும் நிலை "

தலைவர் அவர்களே, இந்த நிலை சமீப காலத்திலே ஏற்பட்டிருக்கிறது. அதுவும் குறிப்பாக தமிழகத்திலே இந்தியைத் திணிக்கக்கூடாதென்ற வகையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றிய பிறகு ஏற்பட்டிருக்கக்கூடிய நிலை இது. அங்குள்ள மகாராஷ்டிர அரசாங்கமோ, வேறு அரசாங்கங்களோ, சிவாஜி சேனை நடவடிக்கையைத் தடை செய்ய முன்வரவில்லை. இதனால் நம்முடைய தேசிய ஒருமைப்பாடு சீர்குலைகிறது. தேசிய ஒருமைப்பாட்டில் அக்கறை கொண்டுள்ள மத்திய அரசு இதிலே தலையிட்டுதடுத்து நிறுத்த முடியாத நிலை இருக்கிறது. அதோடு கூட இதனால் 15,000 தொழிலாள மக்களுடைய வாழ்க்கை பாதிக்கப்படுகிறது. இதிலே சிவாஜி சேனை ஈடுபட்டிருப்பதோடு கூட அந்த நடவடிக்கைகளுக்கு வேறு சில அரசாங்கங்கள் பின் பலமாக இருக்குமோ என்ற சந்தேகம் இருக்கிறது. மீண்டும் இந்தித் திணிப்பைக் கொண்டு வரும் நிலைமையும் இருக்கிறது. ஆகவே, தேசிய ஒருமைப்பாட்டைக் குலைக்கும் வகையில் நடக்கும் இந்தக் காரியத்தைப் பற்றி அன்றாடப் பிரச்சினை என்று கருதாமல் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாகக் கருதி விவாதிக்க வேண்டுமென்று கோருகிறேன்.

மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை : தலைவர் அவர்களே, இது குறித்துப் படத் தொழிலில் ஈடுபட்டவர்களும், மற்றவர்களும் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் இதைப் பற்றி இந்த அவையிலே விவாதிப்பதன் மூலம் நிலைமைகள் மேலும் சீர்கேடு அடையாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். இதையும் அரசின் அன்றாட நடவடிக்கைகளில் ஒன்றாகக் கருதி இதிலே ஏற்பட்டிருக்கின்ற சிக்கல்களைத் தீர்க்க இந்த அரசு தகுந்த முறையில் கவனிக்கும் என்ற எண்ணத்தோடு இதை விவாதிக்காமல் இருப்பது நல்லது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது அரசினரின் சாதாரண நிர்வாகத்திற்கு உட்பட்டு தீர்க்கக்கூடிய காரியம் என்ற காரணத்தால், பேரவை நடவடிக்கைகளை ஒத்தி வைத்து விவாதிக்கத் தேவையில்லை. ஆகவே, இதற்கு அனுமதி மறுக்கிறேன்.

(iii) கச்சத்தீவு செல்ல தமிழக மக்களுக்குத் தடை

திரு. செ. பாலசுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகச் சட்டப் பேரவை 42-ஆவது விதியின்படி கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை பற்றி விவாதிக்க சட்டப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கக் கோரி அறிவிக்கை கொடுத்துள்ளேன். அதாவது—

" தமிழ்நாட்டுக்குச் சொந்தமான கச்சத் தீவுக்கு அர்ச். அந்தோணியார் திருவிழாவுக்குச் சென்ற தமிழக மக்களை சுங்க அதிகாரிகளும், துறைமுக அதிகாரிகளும் தடுத்து நிறுத்தியதால் ஏற்பட்டிருக்கும் அவசர நிலை ".

தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையில் இந்த அரசாங்கத்திற்கு இருக்கும் மிகக் குறுகலான பொறுப்பை அறிவேன். நான் அதிகமாக எதுவும் சொல்ல விரும்பவில்லை. இந்தப் பிரச்சினை பற்றி இந்திய அரசாங்கம் துரிதமான நடவடிக்கை எடுத்ததாகக் காணோம். இந்த மன்றத்தின் உணர்வுகளையும், தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளையும் இந்திய அரசாங்கத்திற்குத் தெரிவிக்கும் வகையில் இதைப் பற்றி விவாதிப்பது பயனுள்ளதாக அமையும். காலையில் பத்திரிக்கையில் படிக்கும்போது பார்த்ததில், " இங்கிருந்து செல்கின்றவர்கள் அர்ச் அந்தோணியார் கோவிலுக்கு அனுமதிக்கப்பட்டார்கள் " என்று போடப்பட்டிருக்கிறது. அது எவ்வளவு தூரம் உண்மை என்று தெரியவில்லை. அந்தச் செய்தி உண்மையா என்று அறிய விரும்புகிறேன். இது சம்பந்தமாக இந்த அரசாங்கம்